# ARIVU TNPSC STUDY CENTRE

[GATEWAY FOR TNPSC JOBS]

**ALATHUR-[near] KALLAKURICHI**

**VILLUPURAM-[Dt]**

**Cell-8807745010 rarivutnpsc@gmail.com**

**WWW.FACEBOOK.COM/ARIVU TNPSC STUDY CENTRE-KALLAKURICHI**




## ஒன்பதாம் வகுப்பு தமிழ் மற்றும் சிற்றிலக்கிய காலம்

**FOR TNPSC GROUP 2 [A],GROUP-4 and VAO**

1. வழுவற்றச்சொற்றொடரைத் தேர்க
[1] அழகன் வெண்ணீரில் முகம் கழுவினான்
[2] அழகன் வெந்நீரில் முகம் கழுவினான்
[3] பாதரசம் தாவாரத்தில் உருண்டோடியது
[4] கபிலன் அதிக செலவு செய்வான்
[A] 1,2 சரி
[B] 1,4 சரி
[C] 2,3 சரி
[D] 1,3 சரி

2. அறம்,பொருள்,இன்பம்,வீடு ஆகிய உறுதிப் பொருட் களைப் பெற்று வருவது ____________
[A] காப்பியம்
[B] சிற்றிலக்கியம்
[C] பிள்ளைத்தமிழ்
[D] தூது

3. "கலைக்காப்பியம்"
[A] சிலப்பதிகாரம்
[B] மணிமேகலை
[C] சீவகசிந்தாமணி
[D] A & B

4. பல்லவர் கால காப்பியத்தை தேர்க :
[A] சிலப்பதிகாரம் / மணிமேகலை
[B] பெருங்கதை / சீவகசிந்தாமணி
[C] கம்பராமாயணம் / பெரியபுராணம்
[D] மணிமேகலை / குண்டலகேசி

5. "நாடக காப்பிய நன்னூல்" என்று அழைக்கப்படுவது
[A] சீவகசிந்தாமணி
[B] பெருங்கதை
[C] சிலப்பதிகாரம்
[D] மணிமேகலை

6. ஐம்பெரும் காப்பியங்களில் முதலில் வைத்துப் போற்றப்படுவது ____________
[A] சிலப்பதிகாரம்
[B] மணிமேகலை
[C] தண்டியலங்காரம்
[D] சீவகசிந்தாமணி

7. "தமிழ்ப் பாவலர்தம் வேந்தன்" என்று வீரமாமுனிவர் யாரை வியந்து புகழ்ந்துள்ளார்
[A] இளங்கோவடிகள்
[B] செங்குட்டுவன்
[C] திருத்தக்கதேவர்
[D] சாத்தனார்

8. திரமிள சங்கத்தைச் சார்ந்தவர் ____________
[A] கம்பர்
[B] புகழேந்தி
[C] திருத்தக்கதேவர்
[D] ஔவையார்

9. வைசியர் புராணத்தின் மூலம் அறியப்படும் காப்பியம்
[A] வளையாபதி
[B] குண்டலகேசி
[C] நீலகேசி
[D] சூளாமணி

10. "வெற்றிச்சொல் வேந்தர்"
[A] மயிலைநாதர்
[B] நாதகூத்தனார்
[C] வெண்ணாவலுடையார்
[D] தோலாமொழித்தேவர்

11. "சமய திவாகர விருத்தி"
[A] குண்டலகேசி
[B] வளையாபதி
[C] நீலகேசி
[D] யசோதரகாவியம்

12. "நாக பஞ்சமி" என்று சிறப்பு பெயர் பெற்ற நூல்
[A] நீலகேசி
[B] யசோதரகாவியம்
[C] நாககுமாரகாவியம்
[D] வளையாபதி

13. கம்பரைப் புரந்தவர் "சடையப்ப வள்ளல்" அவரை கம்பராமாயணத்தில் எத்தனை இடங்களில் புகழ்ந்து கூறியுள்ளார்
[A] ஆயிரம்
[B] நூறு
[C] பத்து
[D] ஒன்று

14. கூழுக்கு கவிபாடியவர் ஔவை ; ஓரடிக்கு ஓர் ஆயிரம் பொன் பெற்றவர் யார் ?
[A] கம்பர்
[B] இளங்கோவடிகள்
[C] மகேந்திரவர்மன்
[D] வால்மீகி

15. "வரமிகு கம்பன் சொன்ன வண்ணம்"
[A] பத்தாயிரத்து ஐந்நூறு
[B] தொண்ணூற்று ஆறு
[C] நூற்று பதிமூன்று
[D] ஆறு

16. பெருமைக்குரிய அடியார்களின் பெருமை மிக்க வரலாற்றை கூறும் நூல் ____________
[A] வால்மீகி இராமாயணம்
[B] கம்பராமாயணம்
[C] திருத்தொண்டர் புராணம்
[D] துளசி இராமாயணம்

17. சிந்தாமணியிலிருந்து ஓர் அகப்பைமுகந்துகொண்டேன்
[A] கம்பன்
[B] கபிலன்
[C] வள்ளுவன்
[D] ஜி.யூ.போப்

18. "அநபாயன்" இரண்டாம் குலோத்துங்கன் அவையில் முதலமைச்சராக பணியாற்றியவர் யார் ?
[A] கம்பர்
[B] கபிலர்
[C] அருண்மொழித்தேவர்
[D] அனைவரும்

19. கூற்று : [A] எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்ப திழுக்கு
காரணம் :[R] இக் குறட்பாவில் முதல் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) இரண்டாம் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) ஒன்றி வந்துள்ளதால் இது மோனைத்தொடை ஆகும்.
[A] [A] சரி [R] சரி [A] க்கு [R] சரியான விளக்கமல்ல
[B] [A] சரி [R] சரி [A] க்கு [R] சரியான விளக்கம்
[C] [A] சரி [R] சரி
[D] [A] தவறு [R] சரி

20. "பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ"
[A] மீனாட்சிசுந்தரம்
[B] கே.கே.பிள்ளை
[C] திரு.வி.கல்யாணசுந்தரம்
[D] வ.வே.சு.ஐயர்

21. சம்மந்தரின் பாடல்களுக்கு "யாழ்" மீட்டியவர்
[A] சடையனார்
[B] நேசநாயனார்
[C] நீலகண்டயாழ்ப்பாணர்
[D] பூசலார்

22. அடி தோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது
[A] குறளடி
[B] அளவடி அல்லது நேரடி
[C] சிந்தடி
[D] நெடிலடி அல்லது கழிநெடிலடி

23. சீவகசிந்தாமணியின் உட்பிரிவு ______________
[A] நரிவிருத்தம்
[B] இலம்பகம்
[C] சிவகாமிசரிதம்
[D] கலம்பகம்

24. பேயுருவில் கைலைக்கு தலையால் நடந்து சென்றவர்
[A] சுந்தரர்
[B] பெருமாள்நாயனார்
[C] காரைக்கால் அம்மையார்
[D] மங்கையர்கரசியார்

25. பொருத்துக :
[A] நளவெண்பா - புகழேந்தி
[B] பெருங்கதை - அதிவீரராமபாண்டியர்
[C] நைடதம் - காளிதாசர்
[D] இரகுவம்சம் - கொங்குவேள்
[A] 1 4 2 3
[B] 3 2 4 1
[C] 1 4 3 2
[D] 3 4 2 1

26. கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது :
[A] எழுத்துக்கு - இளம்பூரனார்
[B] சொல்லுக்கு - சேனாவரையர்
[C] பொருளுக்கு - உச்சிமேற்கொள் புலவர்
[D]சிலம்பு முழுவதும் உரைசெய்தவர்-நச்சினார்க்கினியர்

27. பொருத்தமற்றதைத் தேர்க :
[A] வீரசோழியம் - புத்தமித்திரர்
[B] இலக்கண கொத்து - சுவாமிநாத தேசிகர்
[C] இலக்கண விளக்கச் சூறாவளி - சிவஞானமுனிவர்
[D] தொன்னூல் விளக்கம் - வைத்தியநாத தேசிகர்

28. "குட்டி தொல்காப்பியம்"
[A] தொன்னூல் விளக்கம்
[B] இலக்கண விளக்கச் சூறாவளி
[C] இலக்கண விளக்கம்
[D] இலக்கணக்கொத்து

29. 1."உன்னையே நீ அறிவாய்" ________
2."தமிழுக்குத் தொண்டுசெய்வோர் சாவதில்லை" ____
3."நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா" _________
4."தமிழ்நாட்டின் வால்ட்விட்மன்" ____________

[A] பாரதிதாசன் / சாக்ரடீஸ் / பாரதிதாசன் / பாரதியார்
[B] பாரதிதாசன் / சாக்ரடீஸ் / பாரதிதாசன்/பாரதிதாசன்
[C] சாக்ரடீஸ் / பாரதிதாசன் / பாரதிதாசன் / பாரதியார்
[D] சாக்ரடீஸ் / பாரதிதாசன் / பாரதியார் /

30. பொருத்தமற்றவர்களைத் தேர்க :
[A] இளம்பூரனார்
[B] அடியார்க்குநல்லார்
[C] பெருந்தேவனார்
[D] நச்சினார்க்கினியர்

31. பொருத்துக :
[A] யாமம் - அளவுப்பெயர்
[B] மா - கொடுத்தல்
[C] நாழி - விலங்கு
[D] ஈதல் - நள்ளிரவு
[A] 1 3 4 2
[B] 4 3 1 2
[C] 1 3 2 4
[D] 1 2 3 4

32. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
[A] எயிறு
[B] பற்கள்
[C] மயில்தோகை
[D] பவளம்

33. முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், கிளிஞ்சல் பொருத்தமற்ற ஒரு சொல்
[A] கிளிஞ்சல்
[B] முத்து
[C] பவளம்
[D] மரகதம்

34. "வெளித்தோற்றம் கொண்டு ஒருவரை அளவிடுதல் தவறானது ; உருவு கண்டு எள்ளாமை வேண்டும்"
[A] விவேகானந்தர்
[B] பாரதிதாசன்
[C] கிருபானந்தவாரியார்
[D] இராமகிருஷ்ணர்

35. வானியலைப் பற்றிக் கணித்துக் கூறுபவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் ?
[A] அறிவன்
[B] கணியன்
[C] நாழிகைக்கணக்கர்
[D] அனைவரும்

36. எட்டுத்தொகை நூலைத் தேர்க ______________
[A] சிலப்பதிகாரம்
[B] திருக்குறள்
[C] குறுந்தொகை
[D] நாலடியார்

37. நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று சரியான இலக்கணத்தைத் தேர்க
[A] உயர்வுசிறப்பும்மை
[B] இடப்பெயர்
[C] இழிவுசிறப்பும்மை
[D] காலப்பெயர்

38. "இறையனார் எழுதிய களவியலுக்கு உரைகண்டவர்" மதுரை கணக்காயனார் மகனார் ______________
[A] தேவகுலத்தார்
[B] பூரிக்கோ
[C] பெருந்தேவனார்
[D] நக்கீரர்

39. இலக்கணக் குறிப்பில் பொருத்தமற்றது :
[A] வெண்குடை - பண்புப்பெயர்
[B] நாழி - ஆகுபெயர்
[C] ஈதல் - தொழிற்பெயர்
[D] விருந்து - பண்பாகுபெயர்

40. "செல்வத்துப் பயனே ஈதல்"
[A] தேவகுலத்தார்
[B] நக்கீரர்
[C] பூரிக்கோ
[D] சுரதா

41. "தேமதுரச் தமிழோசை உலகமெல்லாம் பரவ வகை செய்வோம்" என்று முரசு கொட்டுங்கள் - கூறியவர்
[A] பாரதியார்
[B] பாரதிதாசன்
[C] ரா.பி.சேதுப்பிள்ளை
[D] திரு.வி.க

42. நான் சமையல் கற்றேன். எவ்வகை ஆகுபெயர்
[A] கருவியாகுபெயர்
[B] கருத்தாகுபெயர்
[C] காரியவாகுபெயர்
[D] உவமையாகுபெயர்

43. "அறுவடைத் திருவிழா" எங்கு கொண்டாடப்படுகிறது
[A] ஆந்திரா , கர்நாடகா
[B] ஜப்பான் , ஜாவா
[C] மகாராஷ்டிரா , இலங்கை
[D] பஞ்சாப் , கேரளா

44. "கிருத்துவக் கம்பர்" என புகழப்படுபவர் ________
[A] வீரமாமுனிவர்
[B] ஜி.யு.போப்
[C] கிருட்டிணப்பிள்ளை
[D] தத்துவப்போதகர்

45. 'குன்றாத நசரேயன் யூதருக்கு குலவேந்தன்'
[A] கலிங்கத்துப்பரணி
[B] தேம்பாவணி
[C] இரட்சணிய யாத்திரிகம்
[D] மேருமந்திரம்

46. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| [A] குருசு | (1) அடியார் | | |
| [B] தொழும்பர் | (2) சிலுவை | | |
| [C] ஆகடியம் | (3) ஏளனம் | | |
| [D] செற்றம் | (4) சினம் | | |

[A] 4 3 2 1 [B] 2 1 3 4
[C] 2 1 4 3 [D] 1 2 4 3

47. "நம்பி யழைத்தனன் கௌரவர் கோமான்" நல்லதோர் நுந்தை" யெனவுரை செய்வாய்
[A] தந்தை
[B] மருஉ
[C] திருதராட்டிரன்
[D] சகுனி

48. தமிழ்ச்சொல் அறிவோம் ; பொருத்தமற்றது
[A] சமஸ்தானம் - அரசு
[B] இலாகா - கருவூலம்
[C] பிரதானம் - முதன்மை
[D] உத்தியோகஸ்தர் - அலுவலர்

49. "ஒரு பொருள் குறித்து பல சொற்கள்" பொருந்தாதது
[A] கிரி
[B] சிலம்பு
[C] பொருப்பு
[D] பொலிவு

50. கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது :
[A] பொன்வளையல் - இயல்புப்புணர்ச்சி
[B] வாழைமரம் - இயல்புப்புணர்ச்சி
[C] வாழைப்பழம் - தோன்றல் புணர்ச்சி
[D] கற்கோட்டை - கெடுதல் புணர்ச்சி

51. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடு :
[A] இனிமையும் நீர்மையும் எனலாகும் தமிழ்
[B] நீர்மையும் இனிமையும் தமிழ் எனலாகும்
[C] தமிழ் எனலாகும் இனிமையும் நீர்மையும்
[D] இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்

52. இராணி மங்கம்மாளும், இளவரசரும் மீனாட்சி திருமணத்தை எங்கு தங்கி கண்டுகளித்தனர்
[A] தமுக்கம் அரண்மனை
[B] திருமலை நாயக்கர் மகால்
[C] மீனாட்சி அம்மன் திருக்கோயில்
[D] தஞ்சை அரண்மனை

53. "மங்கம்மாள் சாலை" ________ முதல் ________ வரை
[A] கன்னியாகுமரி , தஞ்சாவூர்
[B] மதுரை , தஞ்சாவூர்
[C] திருவிதாங்கூர் , கல்குளம்
[D] கன்னியாகுமரி , மதுரை

54. "இராணிமங்கம்மாள்" எப்பிரிவினருக்கு மானியம் வழங்கி சிறப்பித்துள்ள செய்தி கல்வெட்டு கூறுகிறது
[A] இந்து
[B] இஸ்லாமியர்
[C] கிருத்துவர்
[D] சமணம்

55. சிறைத்தண்டனைக்காக நீ வருந்துகிறாயா ?
[A] வினாவாக்கியம்
[B] செய்திவாக்கியம்
[C] தொடர்வாக்கியம்
[D] எதுவுமில்லை

56. "இந்தியன் ஒப்பீனியன் "
[A] பாரதியார்
[B] நேரு
[C] மறைமலையடிகள்
[D] காந்தி

57. தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர்
[A] இராமலிங்கம்
[B] கண்ணதாசன்
[C] பாரதியார்
[D] வாணிதாசன்

58. "இன்பசொரூபம்" இலக்கணம் தருக
[A] பெயரெச்சம்
[B] வினையெச்சம்
[C] உவமைத்தொகை
[D] உருவகம்

59. பொருத்தமற்றது :
I.இருநிலம் - உரிச்சொற்றொடர்
II.இன்மை,திண்மை - பண்பாகுபெயர்
III.கண்ணோட்டம் - தொழிற்பெயர்
IV.உள்ளத்தூஉம் - இன்னிசையளபெடை
[A] I
[B] II
[C] III
[D] IV

60. <u>தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே</u> !
இவ்வரியில் இடம்பெற்றுள்ள மாநிலம்
[A] கேரளா
[B] ஆந்திரா
[C] தமிழ்நாடு
[D] குஜராத்

61. "மங்கம்மாள்" அன்னச்சத்திரம் கட்டிய இடம்
[A] மதுரை
[B] தஞ்சாவூர்
[C] திருவிதாங்கூர்
[D] பழனி

62. "ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர் மாற்றாரை மாற்றும் படை"- மாற்றார் பொருள் தருக
[A] வலிமை
[B] பகைவர்
[C] சான்றாண்மை
[D] தீங்கு

63. *"No rains no grains"* தமிழ்படுத்துக
[A] மாரியல்லது காரியம் இல்லை
[B] காலத்திற்கு ஏற்ற கோலம் கொள்
[C] நுணலும் தன் வாயாற் கெடும்
[D] கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

64. "மாம்பழக்கவிச் சிங்க நாவலர்" என்று தமிழ்நாடு யாரைப் போற்றி புகழ்ந்தது
[A] புகழேந்தி
[B] முருகன்
[C] பழனி
[D] குமரகுருபரர்

65. "தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு"- எவ்வகை அணியைத் தேர்க
[A] வேற்றுமையணி
[B] ஏகதேச உருவக அணி
[C] சொற்பொருள் பின்வரு நிலையணி
[D] சொல் பின்வரு நிலையணி

66. கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது :
I.விளம்முன் நிரை - நிரையொன்றாசிரியத்தளை
II.மாமுன் நிரையும் விளமுன்நேர்- இயற்சீர்வெண்டளை
III.கனி முன் நிரை - ஒன்றாத வஞ்சித்தளை
IV.காய் முன் நிரை - கலித்தளை
[A] I
[B] II
[C] III
[D] IV

67. பொருத்தமற்றதைத் தேர்க :
[A] உண்டி முதற்றே உலகு - வள்ளுவம்
[B] பசிப்பிணி என்னும் பாவி - புறநானூறு
[C] மீதூண் விரும்பேல் - ஔவையார்
[D] உடம்பார் அழியின் உயிரார் - திருமூலர்

68. நோய்க்கு முதற்காரணம் _________
[A] நீர்
[B] உணவு
[C] இனிப்பு
[D] உப்பு

69. முரிந்த எலும்பு விரைவில் கூட ___________
[A] மாவுக்கட்டு போடலாம்
[B] வேப்பம் பட்டை பற்று போடலாம்
[C] முருங்கப்பட்டை பற்று போடலாம்
[D] வேலம்பட்டை பற்று போடலாம்

70. கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது "கரிசலாங்கண்ணி"
[A] கரிசாலை
[B] கையறுநிலை
[C] பிருங்கராசம்
[D] தேகராசம்

71. அரைசன் தேவியொ டாயிழை நல்வீர் - இலக்கணம்
[A] முதற்போலி
[B] இடைப்போலி
[C] ஈற்றுப்போலி
[D] முற்றுப்போலி

72. தேசபக்தன்,நவசக்தி ஆசிரியர் _____
தென்றல்,முல்லை,தமிழ்மலர் ஆசிரியர் _______
குயில், இந்தியா ஆசிரியர் _________
[A] தமிழ்த்தென்றல்/வணங்காமுடி/பாவேந்தர்/உலகக்கவி
[B] திரு.வி.க/கண்ணதாசன்/பாரதியார்/பாரதிதாசன்
[C] தமிழ்த்தென்றல்/பாவேந்தர்/பைந்தமிழ் பாவலன்
[D] இவற்றில் எதுவுமில்லை

73. கீழ்கண்டவற்றுள் எது / எவை சரி
[I] திருஞானசம்மந்தர் - திருநாவுக்கரசர்
[II] கம்பர் - ஒட்டக்கூத்தர்
[III] இளங்கோவடிகள் - சீத்தலைச்சாத்தனார்
[IV] அதியமான் - ஔவையார்
[A] I, II, IV
[B] I, IV
[C] I,II,III,IV
[D] III, IV

74. "விலங்கும் பேயும் நரகரும் ஆகிக்" ... ... .... ..... ...... ........
[A] கலிங்கத்துப்பரணி
[B] மணிமேகலை
[C] திருமந்திரம்
[D] கம்பராமாயணம்

75. இவரின் கவிதைகள் மக்கள் அடையும் இன்ப துன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடு பொருளாகக் கொண்டவை
[A] கவிமணி
[B] புரட்சிகவிஞர்
[C] மாக்கவி
[D] சேஷகிரிசாஸ்திரி

76. கீழ்கண்டவற்றுள் திரு.வி.க பற்றி சரியானது
I."தமிழ்த்தென்றல்" என சிறப்பிக்கப்படுகிறார்
II.எங்கும் தமிழ், எதிலும் தமிழ், ஏற்று வாழ்ந்தார்
III."மொழிநடை மலை"- என தெ.பொ.மீ அழைத்தார்
IV.நான்தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன்
[A] I, IV
[B] II, III
[C] I, II ,IV
[D] I, II, III, IV

77. "துவ்வா விடம் அமுதமாகும்"
[A] பெயரெச்சம்
[B] வினையெச்சம்
[C] ஈறுகெட்ட எதிர்மறைபெயரெச்சம்
[D] முற்றெச்சம்

78. திரு.வி.க-வின் ஆசிரியர்
[A] மயிலேறும் பெருமாள்
[B] எம்பார்
[C] குறவறைவாசித்தான்பிள்ளை
[D] கதிரைவேலர்

79. பொருள், இடத்திற்கு ஆகி வருவது ___________
தயிரை இறக்கு. இத்தொடர் _________ ஆகுபெயர்
[A] தானியாகுபெயர்
[B] பொருளாகுபெயர்
[C] இடவாகுபெயர்
[D] A & C

80. செய்யுளில் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும், பொருள்படப் பொருத்துவது _________ பொருள்கோளாகும்
[A] விற்பூட்டுப்பொருள்கோள்
[B] தாப்பிசைப் பொருள்கோள்
[C] கொண்டுகூட்டுப் பொருள்கோள்
[D] இவற்றுள் எதுவுமில்லை

81. கீழ்கண்டவற்றுள் ஒருமைப்பன்மை பிழையைத் தேர்க
[A] மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுதினார்கள்
[B] மூவர் தேவாரத்தைப் பாடினர்
[C] என் புத்தகம் இவையல்ல
[D] யானை பிளிறியது, மான்கள் ஓடின

82. உவமைத்தொகையில் பொருத்தமற்றது
[A] தாமரைமுகம்
[B] மொழித்தேன்
[C] பவளவாய்
[D] முத்துப்பல்

83. பொருள்கோள் எத்தனை வகைப்படும்
[A] 16
[B] 8
[C] 6
[D] 4

84. மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக
[A] பொன்செய்யும் மருந்து மனமே என்ற போதும்
[B] போதும் என்ற மனமே மருந்து பொன்செய்யும்
[C] போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து
[D] மனமே மருந்து பொன்செய்யும் என்ற போதும்

85. "உண்பது நாழி உடுப்பவை இரண்டே"
[A] நக்கீரர்
[B] தேவகுலத்தார்
[C] பூரிக்கோ
[D] திருமூலர்

86. "வையை நாடவன்" "மீனவன்" பொருள் தருக
[A] பாண்டியன்
[B] சோழன்
[C] சேரன்
[D] அனைவரும்

87. கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது :
I.பாடு எனக்கூறியவுடன் பாடுபவர் - ஆசுகவி
II.ஓசைநலம் சிறக்கப் பாடுபவர் - மதுரகவி
III.சுவை வளம் செழிக்கப்பாடுபவர் - வித்தாரகவி
IV.தூய காப்பியங்கள் இயற்றுபவர் - சித்திரகவி
[A] I, II
[B] II, IV
[C] III, IV
[D] I, IV

88. "கவிமணி இயற்றிய நூல்களில் பொருந்தாதது"
[A] மலரும் மாலையும்
[B] மருமக்கள் வழி மான்மியம்
[C] குழந்தை இலக்கியம்
[D] ஆசிய ஜோதி (லைட் ஆப் ஏசியா)

89. <u>கொல்லா நலத்தது</u> நோன்மை பிறர்தீமை
<u>சொல்லா நலத்தது</u> சால்பு.
[A] ஈறுகெட்ட எதிர்மறை
[B] ஒற்றளபெடை
[C] இன்னிசை அளபெடை
[D] தொழிற்பெயர்

90. கடற்பயணம் குறித்து தொல்காப்பியம் காலில் (தரைவழிப்பிரிதல்) கலத்தில் (நீர்வழிப்பிரிதல்) என்று எந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது
[A] எழுத்ததிகாரம்
[B] சொல்லதிகாரம்
[C] பொருளதிகாரம்
[D] யாப்பதிகாரம்

91. பொருத்துக :

| | |
|---|---|
| [a] பொன்னன் | (1) தொழிற்பெயர் |
| [b] ஊரன் | (2) சினைப்பெயர் |
| [c] ஆதிரையான் | (3) பண்புப்பெயர் |
| [d] கரியன் | (4) காலப்பெயர் |
| [e] நடிகன் | (5) இடப்பெயர் |
| [f] கண்ணன் | (6) பொருட்பெயர் |

[A] 1 2 3 4 5 6
[B] 6 5 4 3 1 2
[C] 2 5 6 1 3 4
[D] 6 5 4 3 2 1

92. அருஞ்சொற்பொருளில் பொருத்தமற்றது :
[A] தரணி - உலகம்
[B] தாரம் - மனையாள்
[C] சுகம் - நலமுடன்
[D] கீண்டு - பிளந்து

93. வள்ளியம்மை எங்கு பிறந்தார் ____________
[A] தில்லையாடி
[B] வால்க்ஸ்ரன்ட்
[C] தென்னாப்ரிக்கா
[D] ஜோகன்ஸ்பர்க்

94. 'அத்தி பூத்தாற்போல' ... ... ...
[A] அரிது [B] எளிது
[C] கடினம் [D] அனைத்தும்

95. "யான்" என்னும் தன்மை ஒருமைப் பெயர் நான்காம் வேற்றுமை உருபேற்கும் போது ______ என திரியும்
[A] என்னை [B] என்னால்
[C] எனது [D] எனக்கு

96. செவிக்குனவாவது ___________
[A] புகழ் [B] கேள்வி
[C] மகிழ்ச்சி [D] A & B சரி

97. உம், என்று, கொல், அம்ம எவ்வகைச்சொற்கள்
[A] பெயர்ச்சொற்கள் [B] இடைச்சொற்கள்
[C] வினைச்சொற்கள் [D] உரிச்சொற்கள்

98. "சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
ஈர்த்திட் டுயர்துலைதான் ஏறினான்"-நேர்ந்த
[A] சிபிமன்னன் [B] மனுநீதிமன்னன்
[C] செங்குட்டுவன் [D] கரிகாலன்

99. கண்டறிவாய் ! எழுந்திரு நீ ! இளந்தமிழா,
கண்விழிப்பாய் ! இவ்வரியுடன் தொடர்புடையவர்
[A] திரு.வி.க [B] மு.வ
[C] பாரதியார் [D] பாரதிதாசன்

100. இந்நிலை "சுவை" எனப்படும், இசைத்தமிழில் "குரல்" எனப்படும், நாடகத்தமிழில் "விறல்" எனப்படும், என்று எந்த நூல் கூறுகிறது ?
[A] சிலப்பதிகாரம் [B] தொல்காப்பியம்
[C] மணிமேகலை [D] நன்னூல்

சுயமாக முன்னேறிய மனிதர்கள் என்று யாரும் கிடையாது, எனக்கு அதிக உதவிகள் கிட்டின நான் கண்டுகொண்டது என்னவெனில், நீ உழைக்க தயாராய் இருந்தால், பலர் உனக்கு உதவத் தயாராய் இருக்கிறார்கள் ! என்றும் உங்களுடன்
*அறிவு பயிற்சி மையம் - ஆலத்தூர்*

ANSWER KEYS

[1]B [2]A [3]D [4]B [5]D [6]D [7]C [8] C [9]A [10]D [11] C [12]C

[13]C [14]A [15] B [16] C [17]A [18]C [19]B [20]A [21]C [22]B [23]B [24]C

[25]A [26]D [27]D[28] C [29]C [30] C [31]B [32]C [33]A [34]C [35]D [36] C

[37] A [38] D [39]A [40]B [41] C [42]C [43]B [44]C [45] C [46]B [47]B [48] B

[49] D [50] D [51] D [52] A [53]D [54]B [55]A [56] D [57]A [58]D [59]B [60]C

[61] A [62]B [63] A [64]C [65]A [66]C [67]B [68]D [69]C [70]B [71]B [72] A

[73] C [74] B [75]A [76] D [77] C [78]D [79] A [80]A [81]C [82] B [83]B [84]C

[85] A [86] A [87] C [88] C [89]A [90]A [91]B [92]C [93] C [94] A [95]D [96]B

[97]B [98] A [99]D [100]B


# ARIVU TNPSC STUDY CENTRE

KANCHANA DEVI MATRIC SCHOOL

ALATHUR (near by) KALLAKURICHI

VILLUPURAM dt

Cell- 8807745010 emial- rarivutnpsc@gmail.com

www.facebook.com/ARIVUTNPSC

www.facebook.com/arivu tnpsc study center-kallakurich


**VAO**

விரைவில் கிராம நிர்வாகம் தொடர்பான கேள்விகள் பதிவேற்றம் செய்யப்படும்

கிராம நிர்வாகம் தொடர்பான கேள்விகள் தமிழக அரசால் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு [village administrative officer] வழங்கப்படும் பயிற்சி கையேடுகளில் இருந்து கேட்கப்படுகின்றன

தேர்வர்கள் 25/25 கேள்விகள் சரியாக பதிலளிக்கும் வகையில் வரும் காலங்களில் நமது பயிற்சி மையம் கிராம நிர்வாகம் தொடர்பான கேள்வித்தாள் பதிவேற்றம் செய்யப்படும்...........